## ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்புமிக்க குழந்தைகாள் !

இந்த வாரம் நான் ஏமாந்ததைப்போல் ஒரு போதும் ஏமாறவில்லை! நண்பர்களுக்குக் கடிதங்களெழுதி அதன் மூலம் உங்கள் கூட்டுறவுக் கொள்கையை ஸ்திரப்படுத்த எண்ணி நான் ஒரு போட்டி ஏற்படுத்தினேனல்லவா? இதன் பலனைக் கண்டுதான் நான் ஏமாந்துபோனேன். அநேக குழந்தைகள் எனது உள்ளக்கிடக்கையை நன்கறிந்து கொள்ளவில்லை. போட்டி ஏற்பட்ட காரணத்தையும் தெரிந்துகொள்ளவில்லை. போட்டிக்காகக் கடிதமெழுதுவதல்ல. எழுதிய கடிதத்துக்குத்தான் போட்டி என்ற விஷயத்தை யறியாது அநேகம் பிள்ளைகள் தாமெழுதிய கடிதங்களில் வெளிப்படையாக "இந்தக் கடிதத்தை உடனே தாத்தாவுக்கு அனுப்பி வைக்கவும்" என்றெழுதியிருக்கிறார்கள்! பேரப்பிள்ளைகளே, உங்களை நான் நண்பருக்குக் கடிதமெழுதச்சொன்னது இதற்காகவல்ல; அதாவது, பரிசு பெறுவதற்காகக் கடிதமெழுதச் சொன்னதல்ல. சாதாரணமாக நீங்கள் நண்பருடன் கடிதமெழுதிவரவேண்டும். அதில் விசேஷமான அம்சங்கள் நிறைந்த கடிதத்துக்கு நான் பரிசு கொடுக்க எண்ணியிருந்தேன். ஆனால் நீங்கள் அதை மறந்து தாத்தாவுக்கு அனுப்பவேண்டும் என்ற கட்டளையுடன் நீங்கள் நண்பராகத் தெரிந்தவர்களுக்குக் கடிதமெழுதியிருக்கிறீர்கள். ஒருவேளை இத்துடன் கடிதப் போக்கு வரத்தையும் நிறுத்திவிடுவீர்களோ?

இனி, பலரின் கடிதங்கள் பெரிய பெரிய வியாசமாயிருக்கிறது. இலங்கையின் தேசிய விஷயங்களிற்கூடப் பலர் கைவைத்திருக்கின்றனர். இவையெல்லாம் சாதாரணமாக இரு நண்பரின் கடிதங்களில் நாம் பார்ப்பதில்லை. வலிந்தெழுதப்பட்ட கட்டுரைகளாகவே இந்தக்கடிதங்கள் காணப்படுகின்றன. ஆகையால் எப்படி நான் இவைகளில் தெரிந்து பரிசு கொடுப்பதென்பது கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் இப்போது நான்சில கடிதங்களில் கண்ட குறைகளை எடுத்துக் காட்டுகிறேன். இந்தப் பரிசுத் திட்டத்தை வேறோர் முறைக்கு திடீரென முன்னறிவித்தலின்றி வைக்கப்போகிறேன். அப்படியானால்தான் சரியான பலன் கிடைக்கும். கடிதமெழுதியவர் பெயரைப் போடாது கதைகளனுப்பிய அங்கத்தவரைக் குறிக்கிறேன்:

அ. ஜயேந்திரன்: (1?2) உமது நண்பனின் கடிதத்தில் வலிந்தெழுதப்பட்டவைகள் பல. தாத்தாவுக்கு அனுப்பும்படி சொல்லி, அதற்காக எழுதப்பட்ட ஒரு கட்டுரைமாதிரி இருக்கிறது. அரசியல் விஷயங்கள் எழுதவேண்டாமென்று கூறவும். பாடசாலை மாணவருக்கு அதெல்லாம் இப்போது வேண்டியதில்லை.

சர்மா: (261) உமது நண்பரின் கடிதம் மிகவும் நீண்டுபோயிற்று. வசன நடையும் மிக உயர்ந்துவிட்டது. கடிதத்துக்கு இந்நடை ஏற்றதல்ல.

வி. தெய்வசிகாமணி: (266) உமது நண்பரும் அரசியல் விஷயங்களில் இறங்கிவிட்டார். இரண்டொரு இடங்கள் ஒழுங்கான முறையிலில்லை.

சி அரசரத்தினம்: (18?) உமது நண்பரின் கடிதம் இலங்கையின் தற்கால நிலை என்ற பொருள்பற்றி வியாசமாயிருக்கிறதல்லால், நண்பனுக்கு நண்பன் எழுதிய கடிதமாயில்லை.

ஆகையால் நான் இந்தவாரம் பரிசுத்திட்டத்தை நிறுத்திவிட உத்தேசித்துவிட்டேன். இன்னும் சில நாட்களில், ஒருநாள் திடீரென்று விளம்பரஞ் செய்வேன். அப்போது உங்களிடமுள்ள திறம் கடிதத்தை அனுப்பிவிடுங்கள். எப்போது இந்த விளம்பரம் வருமென்று சொல்லமாட்டேன். ஆகையால் நீங்கள் செய்யவேண்டியது இப்பொழுதிருந்தே உங்களுக்கு இணக்கமான நண்பரைத் தெரிந்து கடிதங்கள் எழுதவும். கடிதங்கள் பொதுவான விஷயங்களிலும், தங்களைப்பற்றியும், வேடிக்கை விநோதமாகவும், சிறியதாகவும் இருக்கவேண்டும். உதாரணமாக வேறோர் பக்கத்தில் பாட்டிக்கு ஒரு பேத்தி இந்தவாரம் எழுதிய கடிதமொன்றைப் பிரசுரிக்கிறேன் பாருங்கள்.

—தாத்தா

### தாத்தா பதில்

வ. நடராசா (262), நீர் கேட்ட விலாசங்கள்: (200) ந. இ. இரத்தினம் குளமங்கால், மல்லாகம். (230) ம. கு. நடராசா நீர்வேலி, அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய்.

க. சின்னத்துரை: (263) தம்பி, ஏன் இவ்வளவாகக் கவலைப்படுகிறீர்? தாத்தா உமது தவறையுணர்ந்து அப்பொழுதே மன்னித்துவிட்டார். நீர் பெயரை நன்றாயறியவில்லையென்பது எனக்குத் தெரியும். வருத்தப்படவேண்டாம்.

வி. தெய்வசிகாமணி: (266) சந்தா என் புதுப்பித்துள்ளவர்களென்றால், தற்போது அங்கத்தவம் பெற்றவர்கள் என்பது கருத்து. சந்தா புதுப்பிக்காதவர்கள் அங்கத்தவர்களாகமாட்டார்கள். ஆகையால் நீர் மயக்கமடையவேண்டாம். உமக்கு சந்தா எவ்வளவு காலம்வரைக்குமுண்டு?

வே. சின்னையா: (260) இல்லை நான் கதிர்காமம் போகவில்லை! பாட்டிகூடப் போகவில்லை. நகைகளையெல்லாம் கள்வர் பறித்துப்போடுவார்களாம்! கடைசியாக நீர் என்ன தந்தீர்? குறும்புப்பயலே, கன்னத்திலொரு கிள்ளுவேண்டுமா?

அ. ஜயேந்திரன்: இப்படியெல்லாம் தாத்தாமேல் கோபித்தால் தாத்தாவுக்கு வருத்தமாயிருக்கும். தற்செயலாகத் தாத்தா இரண்டுவாரம் வெளியே போயிருந்தார். இனிமேல் அப்படிப் போகமாட்டார். குழந்தைகளையெல்லாம் கவனிப்பார். இந்தவாரம் கடிதத்தைப் பார்க்கவும்.

அ. இந்திராவதி: (131) யாரிடத்தில்தப்பினாலும் இந்த இந்திரவதியிடம்தப்புவதுதான் பெரியசங்கடமாயிருக்கிறது! அம்மா! எப்படி நான் 15, 20 விலாசங்களை யனுப்புவது? உமக்கு விருப்பமான நண்பர்களின் பெயரை எடுத்துக் கேட்டால் அவரின் விலாசந் தரலாம். ஆகையால் க. தங்கம்மாவுக்கு எழுதிவாரும். விலாசம்: (282) க. தங்கம்மா (S. S. C) மகாதேவ வித்தியாசாலை, தென்மயிலை, தெல்லிப்பழை.

(தொடர்ச்சி 309-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "கீநமகள்நிலைய" ததி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஆண் ஜூலாய் மீ 30உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதிஸு ஆடிமீ உகவ (6-8-39) { இல. 40

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

சைவ சமய வளர்ச்சிக்காக சைவ வித்தியா விருத்திச் சங்கம் சென்ற பதினைந்து வருடங்களாகச் செய்துவரும் தொண்டு ஒரு சிறிதன்று. பொதுவாக இலங்கையிலும், சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் மேற்படி சங்கம் 93 சைவ வித்தியாசாலைகளைத் தாபித்திருக்கின்றது. மேற்படி பள்ளிக்கூடங்களில் ஏறக்குறைய 13,000 பிள்ளைகள் படிக்கிறார்கள். 93 வித்தியாசாலைகளில் 1 தமிழாசிரிய கல்லூரியும், 1 அனாதைப் பாடசாலையும், 2 ஆங்கில வித்தியாசாலைகளும், 6 துவிபாஷா பாடசாலைகளும், 83 தமிழ்ப் பாடசாலைகளும் அடங்கியுள்ளன.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் இலங்கையிலுள்ள சைவப் பிள்ளைகளுக்கெல்லாம் சைவக் கல்வி ஊட்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. சைவப் பிள்ளைகளெல்லாம் சைவக் கல்வி பெறுமளவும் சை. வி. வி. சங்கத்தின் வேலை நாளுக்குநாள் வளர்ந்துவரும். சை. வி. வி. சங்கம் இப் பெரிய நோக்கத்தை நிறைவேற்றச் சைவர்கள் யாவரும் சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். சைவப் பள்ளிக்கூடங்கள் அருகாமையிலிருக்கும்போது பிறசமயப் பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புதல் சிவத்துரோகமான செய்கையென்பதைச் சைவப் பெற்றோர்கள் உணர்வாராக.

அற்ப தொகையினராகிய பிறசமயத்தவர் பெருந் தொகைப் பள்ளிக்கூடங்களை வைத்து நடாத்தி வருகின்றனர். சை. வி. வி. சங்கம் சைவர்களுடைய உதவியோடு 1000 பள்ளிக்கூடங்களை நடாத்துவதற்குப் போதிய இடம் இருக்கின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் வசிக்கும் சைவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியை நோக்கிச் சைவப் பள்ளிக்கூடங்களைத் தாபிக்க முன்வரின் இக்குறை நீங்கும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் பெருந் தொகைச் சைவர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்து மேற்படி சங்கம் செய்துவரும் தொண்டில் ஈடுபடுவது அவசியமாகும். சைவ வித்தியா விருத்திச் சங்க அறிக்கையிலிருந்து மேற்படி சங்கத்துக்குக் கடனிருப்பதாக அறியக்கிடக்கின்றது. ஒப்புயர்வற்ற இத் தாபனம் கடன்படாவண்ணம் சைவப் பெரியார் பணமுதவ முன்வரவேண்டும்.

சை. வி. வி. சங்கம் செய்ய வேண்டிய வேலைகள் இன்னும் பலவுள. யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு ஓர் ஆங்கில பாடசாலையும் அனாதைப் பாடசாலையும் தாபிக்க வேண்டியது அவசியமாகும். பெண்கள் கல்லூரி தாபிப்பதற்கு நிலம் திரு. சிவகுருநாதரவர்களால் உபரிக்கப்பெற்றிருப்பதாகவும், கட்டடம் முதலியவற்றிற்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்க சை. வி. வி. சங்கம் முன்வரப்போகின்றதெனவும் அறியக்கிடக்கின்றது. சைவர்கள் எல்லோரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்ய முன்வருவார்களென்று நம்புகின்றோம்.

# பெஸ்கி என்ற பெருந்தக்க புலவர்

(முற்றொடர்)

## அகராதிகள் மூன்று

1. தமிழ்-இலத்தீன் அகராதி. இதில் 9000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் மொழியில் பொருள் விளக்கியிருக்கிறார். இவர் காலத்திலே அகராதிகள் தமிழ் மொழியில் இல்லை. திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளே இருந்தன. அவற்றில் சொற்கள் அ, ஆ, இ, ஈ என்ற அகராதி முறைபாய் வைக்கப்படாமல், ஒரு பொருட் பன்மொழிகள், தெய்வப்பெயர்த் தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி என்றிவ்வாறு தொகுக்கப்பெற்றிருப்பதை யாவரும் அறிவர். மேனாட்டு மொழிகளில் உள்ளது போன்ற அகராதியை வீரமாமுனிவர் தமிழ் மொழிக்குத் தொகுத்துத் தந்ததை முதனூலாகவும் வழிகாட்டியாயும் உவின்ஸ்லோ, பபிரிசியுஸ், கதிரைவேற்பிள்ளை முதலியோர் கொண்டு தமிழகராதிகள் இயற்றினர்.

2. போர்த்துக்கேசியம் - தமிழ் - இலத்தீன் அகராதி. இதன்கண் 4400 போர்த்துக்கேசிய பதங்களுக்குத் தமிழிலும் இலத்தீனிலும் உரை தந்திருக்கிறார்.

3. சதுரகராதி: பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அகராதிகளைத் தன்னுட் கொண்டது. மேனாட்டு மொழிகளில் செய்யுளுக்கு 'இயைபுத் தொடை' (Rime) இன்றியமையாததோர் உறுப்பாம். கவி பாடுவோர்க்கு உதவியாய் 'Riming Dictionaries' என்ற தொடையகராதிகள் அம் மொழிகளில் இருக்க, தமிழில் இல்லாத குறையை வீரமாமுனிவர் தொடையகராதியால் தீர்த்து அழியாப் புகழுக்கு அருகராயினர்.

இம் மூன்று அகராதிகளும் பிறநாட்டார் தமிழ் கற்பதற்கும், தமிழ்நாட்டார் போர்த்துக்கேசியமும் இலத்தீனும் கற்பதற்கும், கவி பாடுவதற்கும் எத்துணை உதவி புரிவனவாம் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை.

### இலக்கண நூல்கள்

தமிழ் மொழிக்கு இலக்கண நூல்கள் நான்கு இயற்றியுள்ளார். கொடுந் தமிழ் இலக்கணம் ஒன்று. செந்தமிழ் இலக்கணம் ஒன்று. Clavis Humaniorum Litteratum Sudlnioris Tamulici Idiomatis என்னும் பேரிடப்பட்ட ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல் ஒன்று. 'தொன்னூல்விளக்கம்' என்ற ஐந்திலக்கண நூல் ஒன்று. முன்னைய மூன்றும் லத்தீனில் எழுதப்பட்டவை. நான்காவதோ தமிழ் சூத்திரப் பாக்களும், அவரே எழுதிய உரையும், மேற்கோள்களும், உதாரணங்களும் முடையது. செந்தமிழ் இலக்கணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தொன்னூல் விளக்கம் 1838-ம் ஆண்டு புதுவையில் வேதகிரி முதலியாராலும் அதிசெயநாதபிள்ளையாலும் அச்சேற்றப்பட்டது.

பொருளிலக்கணத்தையும், அணியிலக்கணத்தையும் வீரமாமுனிவர் விளக்கியிருப்பதிலே ஓர் விசேஷத்தைக் கற்றவர் கண்டுணர வேண்டும். பிற தமிழிலக்கண நூல்களில் காணாத நுட்பங்களும், கற்போர்க்குப் பெரிதும் பயன்படக் கூடியவாறு வைத்த புதிய பாகுபாடும் முறையும் காணப்படுகின்றன. தொன்னூல் விளக்கத்தில் உள்ள 'பொருளதிகாரம்' பெயரளவில் ஏனைய தமிழிலக்கண நூல்களை ஒத்திருக்கின்றது. அவர் அதில் நுதலிய பொருளனைத்தும் வேறு. தமிழ் மொழிக்குப் புதிது. நூலைப் படித்துப்பார்க்க நாம் சொல்வதின் உண்மை விளங்கும். ஆங்கிலம் முதலிய மேனாட்டுப் பாஷைகளில் Rhetoric என்ற ஓர் இலக்கண நூல் உண்டு. மாணாக்கர் எழுதும் வியாசம் முதல் கவிபுங்கவர் பாடும் காப்பியம் ஈறாகவுள்ள கதை, வர்ணனை, கட்டுரை, கடிதம், நாவல், நீதிநூல், நாடகம், காவியம், பிற செய்யுள் நூல்கள் ஆகிய எல்லா நூல்களுக்கும், கோயிலிலும், பிரசங்க மேடையிலும், சட்டசபையிலும், நியாயஸ்தலங்களிலும் நிகழ்த்தப்படும் பிரசங்கம், உபநியாசம், சொற்பொழிவு முதலியவற்றுக்கும் பொருந்திய இலக்கணங்களைச் சொல்லுவதும், நூலியற்றுவதற்கும், நடை பழகுவதற்கும், நூல் விமர்சனம் செய்வதற்கும் வழி காட்டுவதுமாம் Rhetoric என்னும் இலக்கண நூல். இதுபோன்ற ஓர் தமிழ்நூலைக் காணவேண்டும் என்று 25 வருஷமாக நாம் தேடியும் காணவில்லை. தமிழ்த்தாய் செய்த தவக்குறைதானோ என்று வருந்தியிருந்தேன். சில நாளுக்குமுன் தொன்னூல் விளக்கத்தைப் பார்த்து வருகையில் பொருளதிகாரத்தைப் படித்தேன். அளவற்ற அகமகிழ்ச்சி யடைந்தேன். 25 வருஷமாய் ஆவலுடன் தேடியதைக் கண்டேன். Rhetoric என்பதே அப் பொருளதிகாரம். அந்த இலக்கணத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார். தொன்னூல் பொருளதிகாரத்தைத் தழுவி தற்காலத் தமிழில் விரிந்தநூல் எழுதித்தருவோர், பாரதியார், பிறமொழிகளில் உள்ள கலைகளை தமிழிலே மொழிபெயர்த்துத் தரவேண்டும் என்று கொண்ட கோரிக்கையை ஈடேறச் செய்தவராவார்.

### காவியங்கள்

வீரமாமுனிவர் 'தேம்பாவணி' என்ற காவியத்தைப் பாடியவர் என்பது யாவரும் அறிந்ததே. மூன்று காண்டங்களாலும் 3611 விருத்தப்பாக்களாலும் முடிந்த இக்காவியம் பெருங் காப்பியங்களுக்கு அறிந்தோர் கூறும் இலக்கணங்களை உடைய நூலாம். "கல்வியிற் பெரியவன்" பாடிய 12 ஆயிரம் இராமாயண விருத்தங்களில் 87 சந்த பேதங்கள் காணப்படுகின்றன. தேம்பாவணியில் 90 சந்த

எவ்வாறிக் குற்றுணர்ந்தார் யாவர் அவர்தமக்கே, அவ்வாறாய் நின்றபொருட் கன்புவைப்ப தெங்ஙனே.



பேதங்களை வீரமாமுனிவர் அமைத்திருக்கிறார். அவர் சீவகசிந்தாமணியை பிறகாவியங்களிலும் விசேஷமாய் மதித்தார் என்பதும், விரும்பிக்கற்றார் என்பதும் அவரியற்றிய இக்கண நூல்களில் தரும் உதாரணச் செய்யுட்களாலும் பிறவற்றாலும் விளங்குகின்றன. இத்தகைய சீவகசிந்தாமணிக்கு நிகரானதோர் காவியத்தை இவர் பாடிமுடித்தார் என்பது பூரணலிங்கம்பிள்ளை கொள்கை. தமிழிலக்கியங்களில் தலைசிறந்த காவியங்கள் நான்கில் தேம்பாவணியும் ஒன்று என்று பிஷப் கால்டுவல் கூறியுள்ளார். வீரமாமுனிவர் தாமே நூலுக்கு உரையும் செய்தார். நூலும் உரையும் புதுவையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

அவர் பாடியவை தேம்பாவணி மட்டுமல்ல. 'கித்தேரியம்மாள் அம்மானை' (1100 பாட்டுக்களாலமைந்தது) 'திருக்காவலூர்க் கலம்பகம்', 'அடைக்கலநாயகிமேல் வெண்கலிப்பா', 'அன்னையழுங்கலந்தாதி', கருணாம்பரப்பதிகம்' இவை யெல்லாம் அவரது கவித்திறனைக் காட்டுவன. கருணாம்பரப்பதிகம், முதற்பாட்டு முதலிரண்டு சீர்களாகிய "மூவாமுதலா" என்பன சீவக சிந்தாமணி கடவுள் வாழ்த்துப்பாட்டின் முதற் சீர்களேயாம்.

### வசன நூல்கள்

போர்த்துக்கேசியரது அரசியல் வர்த்தகங்களுக்குப் போட்டியாய் இந்தியாவுக்கு வந்த டச்சுக்காரர் கத்தோலிக்க மதத்தைத் தூஷித்துப் பொய்ப் பிரசாரம் செய்யலாயினர். அந்தப் பிரசாரத்தைக் கண்டிக்கும் பொருட்டு வேதவிளக்கம், பேதக மறுத்தல், லுத்தேரினத்தார் இயல்பு என்ற வசன நூல்களை வெளியிட்டார். உபதேசிமார்க்கு ஞானத்தைப் புகட்டும் பொருட்டு வேதியரொழுக்கம் எழுதினார். இது தெலுங்கிலும் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. புரொட்டஸ்டண்டாரும் இந் நூலைப் பெரிதும் மதித்து அச்சிட்டுப் படித்து வருகின்றனர். இது வீரமாமுனிவர் இயற்றிய வசன நூல்களுள் தலைசிறந்தது என்று போப்பையர் புகழ்ந்திருக்கிறார். பரமார்த்த குரு கதையைப் படியாத தமிழரும் இரார். தமிழ் இலக்கியங்களிலே நகைச் சுவையைக் காண்பதரிது. இக்கதை ஹாஸ்ய ரசமயமானது. இது லத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதை யன்றி வேறுபுகழுரை இதற்கு வேண்டுவதில்லை. ஞான வுணர்த்துதல் என்பதும் வீரமாமுனிவர் இயற்றியதென்று கூறப்படுகின்றது.

இந்து மதத்தைக் கண்டித்தாவது இந்து மத தெய்வங்களைத் தூஷித்தாவது வீரமாமுனிவர் யாதொரு நூலும் செய்திலர். அவர் செய்ததாகச் செல்லப்படுவது மில்லை. 'வாதக்காலாம்' என்ற ஒரு பாட்டு அவர் பாடியதாகச் சொல்லப்படுகிறது. அவர் பாடியதோ, பிறர் பாடி அவர்மேல் ஏற்றிச் சொல்லப்படுகிறதோ அறியோம். மத தூஷணையால் புறமதத்தார் மனதைப் புண்படுத்தாமலே அவர் கிறீஸ்து மதப் பிரசாரம் செய்து வந்ததாகவே கொள்ள வேண்டும். என்னை? வேலூர் நவாப் தோஸ்து அலிகான் சந்தா சாகிபு என்னும் மகமதிய அரசரது நன்மதிப்பையும் நட்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார் என்பது சரித்திர பூர்வமாய்த் தெரிந்த வரலாறு. வீரமாமுனிவர்க்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறப்பயிற்றிய வித்துவ சிகாமணிகள் யாரோ? அன்னாருள் ஒருவர் பழநியிலிருந்த சுப்பிரதீபக் கவிராயர் என்று உ. வே. சாமிநாதையர் கூறுகிறார். (சங்கத்தமிழும் பிற் காலத்தமிழும் ப. 25.) இந்துக்களாகிய இவர்கள் இவர்க்குப் பாடஞ் சொல்லிவைத்ததனாலே அவரிடம் அத்தியந்த அன்புடையவராயிருந்தனர் என்பது விளங்குகின்றது. இக்காலத்து இந்து வித்துவான்களும் வீரமாமுனிவரை வெறுக்காமலும் தூஷிக்காமலும் அவர் தமிழ்வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை வியந்து போற்றக் கடமைப்பட்டுள்ளனர். தமிழ்ப் பேரறிஞர் மஹா மஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் "சங்கத் தமிழும் பிற் காலத்தமிழும்" என்ற உபந்யாசத்திலே கூறியிருப்பதை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்போமாக.

"தொன்னூலில் மேற்கூறிய ஐந்திலக்கணங்களுமன்றி வேறுசில விசேடப் பகுதிகளும் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. அந்த நூலாசிரியராகிய வீரமாமுனிவரென்பவர், தமிழே வழங்காத அயல்நீவிற் பிறந்து வளர்ந்தும் தமிழ் நாட்டுக்கு வந்து தக்க பண்டிதர்களிடஞ் சென்று முறையே கற்றுத் தமிழ்ப் பாஷையின்கண் மிக்க அன்பு பூண்டு இத் தொன்னூலாகிய இலக்கணமும் தேம்பாவணிமுதலிய இலக்கிய நூல்களும் இயற்றியது இக்காலத்தில் மிகப் பாராட்டற்பாலது. இவர்க்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லிய ஆசிரியர்களுள் முக்கியமானவர் பழநியிலிருந்த சுப்பிரதீபக் கவிராய ரென்பவரென்று கேட்டிருக்கிறேன். (ப. 24, 25.)

தமிழ் வளர்ச்சிக்குக் காரணமா யிருந்தவர்களாகிய வீரமாமுனிவரையும் பிறரையும் போற்றிப் புகழ்வது தாய்மொழிப் பற்றுள்ளவர் அனைவர்க்கும் கடனே.

—"தினமணி"


விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றிய

**அணியிலக்கணம்**

(திருத்தமான பதிப்பு)

விலை சதம் 35.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.


பெண்ணாண் அலியெனவும் பேசாமல் என் அறிவின், கண்ணூடே நின்றவொன்றைக் காணுமா றெங்ஙனே.

# பெஸ்கி என்ற பெருந்தக்க புலவர்

(முற்றொடர்)

## அகராதிகள் மூன்று

1. தமிழ்-இலத்தீன் அகராதி. இதில் 9000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் மொழியில் பொருள் விளக்கியிருக்கிறார். இவர் காலத்திலே அகராதிகள் தமிழ் மொழியில் இல்லை. திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளே இருந்தன. அவற்றில் சொற்கள் அ, ஆ, இ, ஈ என்ற அகராதி முறைபாய் வைக்கப்படாமல், ஒரு பொருட் பன்மொழிகள், தெய்வப்பெயர்த் தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி என்றிவ்வாறு தொகுக்கப்பெற்றிருப்பதை யாவரும் அறிவர். மேனாட்டு மொழிகளில் உள்ளது போன்ற அகராதியை வீரமாமுனிவர் தமிழ் மொழிக்குத் தொகுத்துத் தந்ததை முதனூலாகவும் வழிகாட்டியாயும் உவின்ஸ்லோ, பபிரிசியுஸ், கதிரைவேற்பிள்ளை முதலியோர் கொண்டு தமிழகராதிகள் இயற்றினர்.

2. போர்த்துக்கேசியம் - தமிழ் - இலத்தீன் அகராதி. இதன்கண் 4400 போர்த்துக்கேசிய பதங்களுக்குத் தமிழிலும் இலத்தீனிலும் உரை தந்திருக்கிறார்.

3. சதுரகராதி: பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அகராதிகளைத் தன்னுட் கொண்டது. மேனாட்டு மொழிகளில் செய்யுளுக்கு 'இயைபுத் தொடை' (Rime) இன்றியமையாததோர் உறுப்பாம். கவி பாடுவோர்க்கு உதவியாய் 'Riming Dictionaries' என்ற தொடையகராதிகள் அம் மொழிகளில் இருக்க, தமிழில் இல்லாத குறையை வீரமாமுனிவர் தொடையகராதியால் தீர்த்து அழியாப் புகழுக்கு அருகராயினர்.

இம் மூன்று அகராதிகளும் பிறநாட்டார் தமிழ் கற்பதற்கும், தமிழ்நாட்டார் போர்த்துக்கேசியமும் இலத்தீனும் கற்பதற்கும், கவி பாடுவதற்கும் எத்துணை உதவி புரிவனவாம் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை.

## இலக்கண நூல்கள்

தமிழ் மொழிக்கு இலக்கண நூல்கள் நான்கு இயற்றியுள்ளார். கொடுந் தமிழ் இலக்கணம் ஒன்று. செந்தமிழ் இலக்கணம் ஒன்று. Clavis Humaniorum Litteratum Sudlmioris Tamulici Idiomatis என்னும் பேரிடப்பட்ட ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல் ஒன்று. 'தொன்னூல்விளக்கம்' என்ற ஐந்திலக்கண நூல் ஒன்று. முன்னைய மூன்றும் லத்தீனில் எழுதப்பட்டவை. நான்காவது தமிழ் சூத்திரப் பாக்களும், அவரே எழுதிய உரையும், மேற்கோள்களும், உதாரணங்களு முடையது. செந்தமிழ் இலக்கணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் அச்சியந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தொன்னூல் விளக்கம் 1838-ம் ௵ புதுவையில் வேதகிரி முதலியாராலும் அதிசெயநாதபிள்ளையாலும் அச்சேற்றப்பட்டது.

பொருளிலக்கணத்தையும், அணியிலக்கணத்தையும் வீரமாமுனிவர் விளக்கியிருப்பதிலே ஓர் விசேஷத்தைக் கற்றவர் கண்டுணர வேண்டும். பிற தமிழிலக்கண நூல்களில் காணாத நுட்பங்களும், கற்போர்க்குப் பெரிதும் பயன்படக் கூடியவாறு வைத்த புதிய பாகுபாடும் முறையும் காணப்படுகின்றன. தொன்னூல் விளக்கத்தில் உள்ள 'பொருளதிகாரம்' பெயரளவில் ஏனைய தமிழிலக்கண நூல்களை ஒத்திருக்கின்றன. அவர் அதில் கூறிய பொருளனைத்தும் வேறு. தமிழ் மொழிக்குப் புதிது. நூலைப் படித்துப்பார்க்க நாம் சொல்வதின் உண்மை விளங்கும். ஆங்கிலம் முதலிய மேனாட்டுப் பாஷைகளில் Rhetoric என்ற ஓர் இலக்கண நூல் உண்டு. மாணாக்கர் எழுதும் வியாசம் முதல் கவி புங்கவர் பாடும் காப்பியம் ஈறாகவுள்ள கதை, வர்ணனை, கட்டுரை, கடிதம், நாவல், நீதிநூல், நாடகம், காவியம், பிற செய்யுள் நூல்கள் ஆகிய எல்லா நூல்களுக்கும், கோயிலிலும், பிரசங்க மேடையிலும், சட்டசபையிலும், நியாயஸ்தலங்களிலும் நிகழ்த்தப்படும் பிரசங்கம், உபந்யாசம், சொற்பொழிவு முதலியவற்றுக்கும் பொருந்திய இலக்கணங்களைச் சொல்லுவதும், நூலியற்றுவதற்கும், நடை பழகுவதற்கும், நூல் விமர்சனம் செய்வதற்கும் வழி காட்டுவதுமாம் Rhetoric என்னும் இலக்கண நூல். இதுபோன்ற ஓர் தமிழ்நூலைக் காண வேண்டும் என்று 25 வருஷமாக நாம் தேடியும் காணவில்லை. தமிழ்த்தாய் செய்த தவக்குறைதானோ என்று வருந்தியிருந்தேன். சில நாளுக்குமுன் தொன்னூல் விளக்கத்தைப் பார்த்து வருகையில் பொருளதிகாரத்தைப் படித்தேன். அளவற்ற அகமகிழ்ச்சியடைந்தேன். 25 வருஷமாய் ஆவலுடன் தேடியதைக் கண்டேன். Rhetoric என்பதே அப் பொருளதிகாரம். அந்த இலக்கணத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார். தொன்னூல் பொருளதிகாரத்தைத் தழுவி தற்காலத் தமிழில் விரிந்தநூல் எழுதித்தருவோர், பாரதியார், பிறமொழிகளில் உள்ள கலைகளை தமிழிலே மொழிபெயர்த்துத் தரவேண்டும் என்று கொண்ட கோரிக்கையை ஈடேறச் செய்தவராவார்.

## காவியங்கள்

வீரமாமுனிவர் 'தேம்பாவணி' என்ற காவியத்தைப் பாடியவர் என்பது யாவரும் அறிந்ததே. மூன்று காண்டங்களாலும் 3611 விருத்தப்பாக்களாலும் முடிந்த இக் காவியம் பெருங் காப்பியங்களுக்கு அறிந்தோர் கூறும் இலக்கணங்களை உடைய நூலாம். "கல்வியிற் பெரியவன்" பாடிய 12 ஆயிரம் இராமாயண விருத்தங்களில் 87 சந்த பேதங்கள் காணப்படுகின்றன. தேம்பாவணியில் 90 சந்த





பேதங்களை வீரமாமுனிவர் அமைத்திருக்கிறார். அவர் சீவகசிந்தாமணியை பிறகாவியங்களிலும் விசேஷமாய் மதித்தார் என்பதும், விரும்பிக்கற்றார் என்பதும் அவரியற்றிய இலக்கண நூல்களில் தரும் உதாரணச் செய்யுட்களாலும் பிறவற்றாலும் விளங்குகின்றன. இத்தகைய சீவகசிந்தாமணிக்கு நிகரானதோர் காவியத்தை இவர் பாடிமுடித்தார் என்பது பூரணலிங்கம்பிள்ளை கொள்கை. தமிழிலக்கியங்களில் தலைசிறந்த காவியங்கள் நான்கில் தேம்பாவணியும் ஒன்று என்று பிஷப் கால்டுவெல் கூறியுள்ளார். வீரமாமுனிவர் தாமே நூலுக்கு உரையும் செய்தார். நூலும் உரையும் புதுவையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

அவர் பாடியவை தேம்பாவணி மட்டுமல்ல. 'கித்தேரியம்மாள் அம்மானை' (1100 பாட்டுக்களாலமைந்தது) 'திருக்காவலூர்க் கலம்பகம்', 'அடைக்கலநாயகிமேல் வெண்கலிப்பா', 'அன்னையழுங்கலந்தாதி', கருணாம்பரப்பதிகம்' இவை யெல்லாம் அவரது கவித்திறனைக் காட்டுவன. கருணாம்பரப்பதிகம், முதற்பாட்டு முதலிரண்டு சீர்களாகிய "பூவாமுதலா" என்பன சீவகசிந்தாமணி கடவுள் வாழ்த்துப்பாட்டின் முதற் சீர்களேயாம்.

## வசன நூல்கள்

போர்த்துக்கேசியரது அரசியல் வர்த்தகங்களுக்குப் போட்டியாய் இந்தியாவுக்கு வந்த டச்சுக்காரர் கத்தோலிக்க மதத்தைத் தூஷித்துப் பொய்ப் பிரசாரம் செய்யலாயினர். அந்தப் பிரசாரத்தைக் கண்டிக்கும் பொருட்டு வேதவிளக்கம், பேதக மறுத்தல், லுத்தேரினத்தார் இயல்பு என்ற வசன நூல்களை வெளியிட்டார். உபதேசிமார்க்கு ஞானத்தைப் புகட்டும் பொருட்டு வேதியரொழுக்கம் எழுதினார். இது தெலுங்கிலும் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. புரொட்டஸ்டண்டாரும் இந் நூலைப் பெரிதும் மதித்து அச்சிட்டுப் படித்து வருகின்றனர். இது வீரமாமுனிவர் இயற்றிய வசன நூல்களுள் தலைசிறந்தது என்று போப்பையர் புகழ்ந்திருக்கிறார். பரமார்த்த குரு கதையைப் படியாத தமிழரும் இரார். தமிழ் இலக்கியங்களிலே நகைச் சுவையைக் காண்பதரிது. இக்கதை ஹாஸ்ய ரஸமயமானது. இது லத்தீன், ஆங்கிலம், பிரஞ்சு, ஜேர்மன், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதை யன்றி வேறுபுகழுரை இதற்கு வேண்டுவதில்லை. ஞான வுணர்த்துதல் என்பதும் வீரமாமுனிவர் இயற்றியதென்று கூறப்படுகின்றது.

இந்து மதத்தைக் கண்டித்தாவது இந்து மத தெய்வங்களைத் தூஷித்தாவது வீரமாமுனிவர் யாதொரு நூலும் செய்திலர். அவர் செய்ததாகச் சொல்லப்படுவது மில்லை. 'வாதக்காலம்' என்ற ஒரு பாட்டு அவர் பாடியதாகச் சொல்லப்படுகிறது. அவர் பாடியதோ, பிறர் பாடி அவர்மேல் ஏற்றிச் சொல்லப்படுகிறதோ அறியோம். மததூஷணையால் புறமதத்தார் மனதைப் புண்படுத்தாமலே அவர் கிறீஸ்து மதப் பிரசாரம் செய்து வந்ததாகவே கொள்ள வேண்டும். என்னை? வேலூர் நவாப் தோஸ்து அலிகான் சந்தா சாகிபு என்னும் மகமதிய அரசரது நன்மதிப்பையும் நட்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார் என்பது சரித்திர பூர்வமாய்த் தெரிந்த வரலாறு. வீரமாமுனிவர்க்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறப் பயிற்றிய வித்துவ சிகாமணிகள் யாரோ? அன்னாருள் ஒருவர் பழநியிலிருந்த சுப்பிரதீபக் கவிராயர் என்று உ. வே. சாமிநாதையர் கூறுகிறார். (சங்கத்தமிழும் பிற் காலத்தமிழும் ப. 25.) இந்துக்களாகிய இவர்கள் இவர்க்குப் பாடஞ் சொல்லிவைத்ததினாலே அவரிடம் அத்தியந்த அன்புடையவராயிருந்தனர் என்பது விளங்குகின்றது. இக்காலத்து இந்து வித்துவான்களும் வீரமாமுனிவரை வெறுக்காமலும் தூஷிக்காமலும் அவர் தமிழ்வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினை வியந்து போற்றக் கடமைப்பட்டுள்ளனர். தமிழ்ப் பேரறிஞர் மஹா மஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் "சங்கத் தமிழும் பிற்காலத்தமிழும்" என்ற உபந்யாசத்திலே கூறியிருப்பதை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்போமாக.

"தொன்னூலில் மேற்கூறிய ஐந்திலக்கணங்களுமன்றி வேறுசில விசேடப் பகுதிகளும் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. அந்த நூலாசிரியராகிய வீரமாமுனிவரென்பவர், தமிழே வழங்காத அயல்நாட்டிற் பிறந்து வளர்ந்தும் தமிழ் நாட்டுக்கு வந்து தக்க பண்டிதர்களிடஞ் சென்று முறையே கற்றுத் தமிழ்ப் பாஷையின்கண் மிக்க அன்பு பூண்டு இத் தொன்னூலாகிய இலக்கணமும் தேம்பாவணிமுதலிய இலக்கிய நூல்களும் இயற்றியது இக்காலத்தில் மிகப் பாராட்டற்பாலது. இவர்க்குத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லிய ஆசிரியர்களுள் முக்கியமானவர் பழநியிலிருந்த சுப்பிரதீபக் கவிராய ரென்பவரென்று கேட்டிருக்கிறேன். (ப. 24, 25.)

தமிழ் வளர்ச்சிக்குக் காரணமா யிருந்தவர்களாகிய வீரமாமுனிவரையும் பிறரையும் போற்றிப் புகழ்வது தாய்மொழிப் பற்றுள்ளவர் அனைவர்க்கும் கடனே.

—"தினமணி"

விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய
**அணியிலக்கணம்**
(திருத்தமான பதிப்பு)
**விலை சதம் 35.**
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

# கல்வி

[உடுவில் தெற்குச், சைவ வித்தியாசாலைப் பெற்றோர் தினக் கொண்டாட்டத்தன்று (28-7-39) S. S. C. மாணவன் சி. அரசரத்தினம் (180) செய்த உபந்நியாசம்.]

இந் நிலவுலகத்தின்கண் அவதரித்த மக்களால் அடையப்பெறுவனவற்றுள் கல்வியு மொன்றாகும். கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்கலாம். 'கல்வி என்பதற்குத் தோண்டுதல், ஆராய்தல் என்ற பொருள்களுண்டு. அஃதாவது மனமாகிய கருவியைக் கொண்டு நூல்களை ஆராய்ந்து அறிவைப் பெறுத லென்பதாம். கற்றற்குரிய நூல்களாவன: அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்களைப் பயக்கும் நூல்களும்; அந்நூல்களைக் கற்றற்குக் கருவி நூல்களாய இலக்கணம், கணிதம், தர்க்கம் முதலியவைகளுமாம்.

கற்றலின் நோக்கம்: கற்றலின் நோக்கத்தைப் பலர் பலவாறு கூறுகின்றனர். ஒருசாரார் அறிவைப் பெறுவதற்கென்றும், இன்னொரு சாரார் பொருளைப் பெறுவதற்கென்றும், மற்றொரு சாரார் புகழடைவதற்கென்றும் கருதுகின்றனர். ஆயினும், "அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயன்" என்ற ஆன்றோர் கூற்றுக்கிணங்க, ஒருவர் கல்வி கற்பதினல் இம்மையில் அறத்தையும், பொருளையும், இன்பத்தையும் மறுமையில் மோக்ஷத்தையும் அடைவதே ஏற்புடைப் பொருளாம்.

கல்வியின் பெருமை: கல்விப்பொருள் ஒன்றாலும் அழியவும்மாட்டாது. ஒருவரால் அபகரிக்கப்படவும்மாட்டாது. இம்மையில் பொருளையும், புகழையும் மறுமையில் முத்தியின்பத்தையு முதவும். ஒரு பிறப்பிலே கற்ற கல்வி ஒருவர்க்கு ஏழுபிறப்புஞ் சென்றுதவுந் தன்மையது. இதுபற்றியே திருவள்ளுவ நாயனாரும்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையு மேமாப் புடைத்து."

என்று திருவாய் மலர்ந்தருளினர். அன்றியும்,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையுர் நாட்டும்—உறங்கவலொன்(று)
உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்பதனாலும் கல்வியின் பெருமை நன்கு புலப்படுகின்றது. கல்வியை நல்லாசிரியனிடம் சந்தேக விபரீதமறக் கற்றல்வேண்டும். ஆசிரியன், குரு, கற்பிப்போன், உபாத்தியாயன் என்பன கற்பிப்போரைக் குறிப்பனவாகும். மாணாக்கன், கணக்காயன், ஓதுவோன் என்பன கற்போரைக் குறிப்பனவாகும். நல்லாசிரியனாவான் உயர்குலம், கருணை, கடவுட்பக்தி, நிறைந்த அறிவு முதலிய நற்குணங்கள் அமைந்துள்ளவனாவான். மாணாக்கர் கல்வியை இளமையிலே பயின்றுகொள்ளுதல் வேண்டும். இளமையிற் கற்கும் கல்வி பசுமரத்தறைந்த ஆணி போல மனத்தில் நன்றாகப் பதியும். இதையிட்டே நமது மூதாதையாகிய ஔவைப்பிராட்டியாரும், "இளமையிற் கல்வி சிலையி லெழுத்து" என்று கூறியுள்ளார். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்றபடி ஒருவரிடம் கற்பதற்குப் பொருளில்லாவிட்டாலும், பிச்சையெடுத்தாயினும் கற்றல்வேண்டும் என்பது பெறப்படுகின்றது. மாணாக்கர் ஆசிரியரிடத்தே வெறுப்பேற்படாதவாறு அவர் உவக்கும்படியாக நடந்து கற்றல்வேண்டும். ஓதுவோர் தாம் கற்றவற்றைவிடா துளத்தமைத்தல் வேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற றெரிந்து."

என்றபடி தமக்கு ஏற்ற நூல்களை ஆராய்ந்து கற்றல் மாணவரின் கடமையாம்.

"வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மேலும்
பரிந்து சிலகற்பான் புகுதல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் செறிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

என்று கூறப்பட்டிருப்பதால் தாம் கற்றவற்றை ஓம்பாது மேலும், மேலும் கற்கத்தொடங்குதல் நன்றன்று. கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் ஒருகால் ஊக்கமாகவும், ஒருகால் சோம்பலாகவுமிராது எப்பொழுதும் ஊக்கமாகக் கற்றல் வேண்டும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்(க்)
கற்றனைத் தூறும் அறிவு."

என்பதற்கிணங்க, மேலும், மேலும் கற்பதனல் அறிவு விருத்தியாகும். ஆதலாற் கற்றதுபோது மென்றமையாது மேலும், மேலும் கற்றல்வேண்டும்.

கற்றலி லின்றியமையாமை :-

"கண் ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண் ணுடையர் கல்லா தவர்"

என்றும்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கல்லாரோ டேனை யவர்"

என்றும் கூறப்பட்டிருப்பதால் கல்லாதவர் கண்ணில்லாதவரென்றும், விலங்கோடொப்பாவர் என்பதும் பெறப்படுகின்றது. இதனாற் கல்வியை யாவரும் கற்றலவசியமென்பது வெள்ளிடை மலைபோற் புலனாகின்றது.

கற்றோரின் சிறப்பும் கல்லாதாரின் இழிவும் :- கற்றவர் யாவராலும் மேலாக மதிக்கப்படுவர். யாண்டும் பூசிக்கப்படுவர். இதுபற்றியே,

"யாதானும் நாடாமால் ஊராமான் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

நினைப்பும் மறப்பும்அற நின்ற பரஞ்சோதி, தனைப்புலமா என்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ.



என்று கூறப்பட்டுளது. கல்லாதவர் உருவத்தாலும் அழகாலுஞ் சிறந்திருந்தாலும் முருக்கம் பூவெனப்ப எவராலும் விரும்பப்படமாட்டார்.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு."

என்றும்,

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாம்........."

என்றும் கூறப்பட்டிருப்பதால் ஒருவரை அழகுபடுத்துவது கல்வியேயன்றிப் பிறிதொன்றில்லையாம். இதனாற் கற்றோரின் சிறப்பும், கல்லாதாரின் இழிவும் ஒருவாறு புலப்படுகின்றது.

கல்வியின் பயன் :-

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

என்று திருவள்ளுவர் கூறியிருப்பதால் கல்விப் பயன்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்றும்,

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

என்றும் கூறியிருப்பதால் கல்வியைக் கற்று நல்லொழுக்க நெறியிற் தவறாது ஒழுகுதல் கற்போரின் முதற் கடமையாம். அறிவு நூல்களைக் கற்று, ஞானத்தைப் பெற்றுக், கடவுளுடைய இலக்கணங்களை யறிந்து அவரின் பாதாரவிந்தங்களைத் தொழுது நல்லின்ப மெய்தலே கற்றலின் பயனும்.

# பொது அறிவு வினக்கள்

(கல்முனை)

1. உலகில் அதிக நீளமுள்ள நதி எது?
2. கொழும்பிலிருந்து லண்டனுக்குப் போகு மொருவன் சந்திக்கும் துறைமுகங்க ளெவை?
3. பூவினுள் சிறந்த பூவெது?
4. இராமன் இலங்கைக்கு ஏன் வந்தான்?
5. தற்போதைய ருஷிய தலைவன் யார்?
6. இவ்வாண்டில் கடைசியாகக் கிரகணந் தோன்றிய தினமெது?
7. பல எழுவாயும் ஒரு பயனிலை கொண்டு முடியுமா? முடியுமானல் உதாரணமொன்று கூறுக.
8. இலங்கையில் முத்துக் குளிக்கும் இடங்களெவை?
9. பறவைகள் மயிர் கோதுவதேன்?
10. ஆண்களுக்கிருக்கும் மேல் மீசையால் யாது முபயோகமுண்டா இல்லையா?
11. முத்தமிழ்க ளெவை?
12. நீரினுற் பரவும் நோய்களெவை?

## விண்ணப்பப் பத்திரம்

திகதி.............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்.............................................................

பிறந்த திகதி...................மாதம்...................வருடம்.......................

விலாசம்.............................................................

.............................................................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் .............................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னுகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு: இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

பேச்சுமூச் சில்லாத பேரின்ப வெள்ளமுற்று, நீச்சுநிலை காணுமல் நிற்குநாள் எந்நாளோ.

# கல்வி

[உடுவில் தெற்குச், சைவ வித்தியாசாலைப் பெற்றோர் தினக் கொண்டாட்டத்தன்று (28-7-39) S. S. C. மாணவன் சி. அரசரத்தினம் (180) செய்த உபந்நியாசம்.]

இந் நிலவுலகத்தின்கண் அவதரித்த மக்களால் அடையப்பெறவனவற்றுள் கல்வியு மொன்ருகும். கல்வி யாவது கற்றற்குரிய நூல்களைக் கற்கலாம். 'கல்வி என பதற்குத் தோண்டுதல், ஆராய்தல் என்ற பொருள்க ளுண்டு. அஃதாவது மனமாகிய கருவியைக் கொண்டு நூல்களை ஆராய்ந்து அறிவைப் பெறுத லென்பதாம். கற்றற்குரிய நூல்களாவன: அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்களைப் பயக்கும் நூல் களும்; அந்நூல்களைக் கற்றற்குக் கருவி நூல்களாய இலக்கணம், கணிதம், தர்க்கம் முதலியவைகளுமாம்.

கற்றலின் நோக்கம்: கற்றலின் நோக்கத்தைப் பலர் பலவாறு கூறுகின்றனர். ஒருசாரார் அறிவைப் பெறு வதற்கென்றும், இன்னொரு சாரார் பொருளைப் பெறு வதற்கென்றும், மற்ருெரு சாரார் புகழடைவதற்கென் றும் கருதுகின்றனர். ஆயினும், "அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயன்" என்ற ஆன்ருேர் கூற்றுக் கிணங்க, ஒருவர் கல்வி கற்பதினுல் இம்மையில் அறத் தையும், பொருளையும், இன்பத்தையும் மறுமையில் மோக்ஷத்தையும் அடைவதே எற்புடைப் பொருளாம்.

கல்வியின் பெருமை: கல்விப்பொருள் ஒன்ருலும் அழியவும்மாட்டாது. ஒருவரால் அபகரிக்கப்படவும்மாட் டாது. இம்மையில் பொருளையும், புகழையும் மறுமை யில் முத்தியின்பத்தையு முதவும். ஒரு பிறப்பிலே கற்ற கல்வி ஒருவர்க்கு எழுபிறப்புஞ் சென்றுதவுந் தன்மை யது. இதுபற்றியே திருவள்ளுவ நாயனுரும்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையு மேமாப் புடைத்து."

என்று திருவாய் மலர்ந்தருளினுர். அன்றியும்,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையுர் நாட்டும்—உறுங்கவலொன் (று)
உற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்பதனுலும் கல்வியின் பெருமை நன்கு புலப்படுகின் றது. கல்வியை நல்லாசிரியனிடம் சந்தேக விபரீதமறக் கற்றல்வேண்டும். ஆசிரியன், குரு, கற்பிப்போன், உபாத் தியாயன் என்பன கற்பிப்போரைக் குறிப்பனவாகும். மாணுக்கன், கணக்காயன், ஓதுவோன் என்பன கற் போரைக் குறிப்பனவாகும். நல்லாசிரியனுவான் உயர் குலம், கருணை, கடவுட்பக்தி, நிறைந்த அறிவு முதலிய நற்குணங்கள் அமைந்துள்ளவனுவான். மாணுக்கர் கல் வியை இளமையிலே பயின்றுகொள்ளுதல் வேண்டும். இளமையிற் கறகும் கல்வி பசுமரத்தறைந்த ஆணி போல மனத்தில் நன்ருகப் பதியும். இதையிட்டே நமது மூதாதையாகிய ஒளவைப்பிராட்டியாரும், "இள மையிற் கல்வி சிலையி லெழுத்து" என்று கூறியுள்ளார். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" என்றபடி ஒருவரிடம் கற்பதற்குப் பொரு ளில்லாவிட்டாலும், பிச்சையெடுத்தாயினும் கற்றல்வேண் டும் என்பது பெறப்படுகின்றது. மாணுக்கர் ஆசிரிய ரிடத்தே வெறுப்பேற்படாதவாறு அவர் உவக்கும்படி யாக நடந்து கற்றல்வேண்டும். ஓதுவோர் தாம் கற்ற வற்றைவிடா துளத்தமைத்தல் வேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து."

என்றபடி தமக்கு ஏற்ற நூல்களை ஆராய்ந்து கற்றல் மாணவரின் கடமையாம்.

"வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மேலும்
பரிந்து சிலகற்பான் புகுதல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் செறிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்"

என்று கூறப்பட்டிருப்பதால் தாம் கற்றவற்றை ஓம்பாது மேலும், மேலும் கற்கத்தொடங்குதல் நன்றன்று. கல்வி யிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் ஒருகால் ஊக்க மாகவும், ஒருகால் சோம்பலாகவுமிராது எப்பொழுதும் ஊக்கமாகக் கற்றல் வேண்டும்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்(க்)
கற்றனைத் தூறும் அறிவு."

என்பதற்கிணங்க, மேலும், மேலும் கற்பதனுல் அறிவு விருத்தியாகும். ஆதலாற் கற்றதுபோது மென்றமையாது மேலும், மேலும் கற்றல்வேண்டும்.

கற்றலி லின்றியமையாமை :-

"கண் ணுடைய ரென்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண் ணுடையர் கல்லா தவர்"

என்றும்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கல்லாரோ டேனை யவர்"

என்றும் கூறப்பட்டிருப்பதால் கல்லாதவர் கண்ணில் லாதவரென்றும், விலங்கோடொப்பாவர் என்பதும் பெறப் படுகின்றது. இதனுற் கல்வியை யாவரும் கற்றலவசிய மென்பது வெள்ளிடை மலைபோற் புலனுகின்றது.

கற்ருரின் சிறப்பும் கல்லாதாரின் இழிவும் :- கற்றவர் யாவராலும் மேலாக மதிக்கப்படுவர். யாண்டும் பூசிக்கப் படுவர். இதுபற்றியே,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு."

நினைப்பும் மறப்பும்அற நின்ற பரஞ்சோதி, தனைப்புலமா என்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ.



என்று கூறப்பட்டுளது. கல்லாதவர் உருவத்தாலும் அழ காலுஞ் சிறந்திருந்தாலும் முருக்கம் பூவைப்ப எவரா லும் விரும்பப்படமாட்டார்.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு."

என்றும்,

"கற்ருேர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்ருேர் அணிகலம் வேண்டாம்........."

என்றும் கூறப்பட்டிருப்பதால் ஒருவரை அழகுபடுத்து வது கல்வியேயன்றிப் பிறிதொன்றில்லையாம். இதனுற் கற்ருரின் சிறப்பும், கல்லாதாரின் இழிவும் ஒருவாறு புலப்படுகின்றது.

கல்வியின் பயன் :-

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்."

என்று திருவள்ளுவர் கூறியிருப்பதால் கல்விப் பயன்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்றும்,

"கற்பவை கற்றுக் கற்ருங் கொழுக"

என்றும் கூறியிருப்பதால் கல்வியைக் கற்று நல்லொழுக்க நெறியிற் தவருது ஒழுகுதல் கற்போரின் முதற் கட மையாம். அறிவு நூல்களைக் கற்று, ஞானத்தைப் பெற் றுக், கடவுளுடைய இலக்கணங்களை யறிந்து அவரின் பாதாரவிந்தங்களைத் தொழுது நல்லின்ப மெய்தலே கற் றலின் பயனும்.

## பொது அறிவு வினுக்கள்

(கல்முனை)

1. உலகில் அதிக நீளமுள்ள நதி எது?
2. கொழும்பிலிருந்து லண்டனுக்குப் போகு மொருவன் சந்திக்கும் துறைமுகங்க ளெவை?
3. பூவினுள் சிறந்த பூவெது?
4. இராமன் இலங்கைக்கு ஏன் வந்தான்?
5. தற்போதைய ருஷிய தலைவன் யார்?
6. இவ்வாண்டில் கடைசியாகக் கிரகணந் தோன்றிய தினமெது?
7. பல எழுவாயும் ஒரு பயனிலை கொண்டு முடியுமா? முடியுமானுல் உதாரணமொன்று கூறுக.
8. இலங்கையில் முத்துக் குளிக்கும் இடங்களெவை?
9. பறவைகள் மயிர் கோதுவதேன்?
10. ஆண்களுக்கிருக்கும் மேல் மீசையால் யாது முப யோகமுண்டா இல்லையா?
11. முத்தமிழ்க ளெவை?
12. நீரினுற் பரவும் நோய்களெவை?

### விண்ணப்பப் பத்திரம்

திகதி..............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்" தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பி யிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்..............................

பிறந்த திகதி..................மாதம்..................வருடம்..................

விலாசம்..............................

..............................

பெற்ருர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம்..............................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னுகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[அறிப்பு : இளைஞர்சங்கததில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

பேச்சுமூச் சில்லாத பேரின்ப வெள்ளமுற்று, நீச்சுநிலை காணுமல் நிற்குநாள் எந்நாளோ.

# பொறுமை கொள்ளேல்

சின்னப்பாவும், காசிப்பிள்ளையுஞ் சகோதரர்கள். சின்னப்பாவுக்கு ஒரேயொரு புத்திரன்! அவன் பெயர் சுத்தவீரன். காசிப்பிள்ளைக்கு அநேக புத்திரர்களுண்டு; சின்னப்பா வறியவர்; காசிப்பிள்ளை பணக்காரன்; கொஞ்சம் பொறுமையும் கூட.

கொஞ்சக் காலத்தால் சின்னப்பா இறந்து போனார். அவருடைய மனைவியும், பிள்ளையுங் காசிப்பிள்ளை வீட்டிற்கு வந்தார்கள். காசிப்பிள்ளை சுத்த வீரனைத் தன் பிள்ளைகளோடு படிக்க விடவில்லை; சில மாடுகளைக் கொடுத்து 'மேய்த்துவா' என்றனுப்பினான். சுத்த வீரனுக்கென்று புறம்பாகவும் ஒரு மாடு கொடுத்தான். சிறுவன் தனது மாட்டை மேய்த்தான்; காசிப்பிள்ளையின் மாடுகளைக் கட்டி வைத்தான். இதனையறிந்த காசிப்பிள்ளை அவனுடைய மாட்டை வெட்டிவிட்டான்.

சிறுவன், "குஞ்சியப்பு; மாடு போனாலுந் தோல் பத்திரம்" என்றான்! காசிப்பிள்ளை கோபத்துடன் வீடு போய்ச் சேர்ந்தான்.

சுத்த வீரன் அம் மாட்டின் தோலை உரித்துக் கொண்டு வீட்டுக்குப் போனான், தன் தாயிடம் தோல் விற்று வருவதாகச் சொல்லிவிட்டுக் காட்டு மார்க்கமாகச் சென்றான். பொழுது அஸ்தமித்தது; ஒரே அந்தகாரம்! காட்டுக்குள் ஒரு முனியப்பர் கோவில் இருந்தது. களவெடுப்பவர்கள் வழிபடுந் தெய்வமும் அவர்! அக் கோவிலின் மூலையிற் சிறுவன் படுத்துக்கொண்டான்.

அன்று, களவெடுப்பதற்கு வந்த கள்வர் சன்னிதானத்தின் முன்னின்று, "நாங்கள் எடுக்கும் பொருளில் அரைவாசி உமக்கு" என்று நேர்ந்துவிட்டுக் களவெடுக்கப் போயினர். சுத்த வீரன் இவற்றைக் கேட்டுக் கொண்டு படுத்திருந்தான். கள்வர் களவெடுத்துக்கொண்டு வந்து பாதியைப் பங்கிட்டு வைத்துவிட்டுப் போக ஆரம்பித்தனர். இவற்றையெல்லாம் பார்த்தான் சுத்த வீரன்! அவனுக்கு வந்தது ஆவேசம்!! எடுத்தான் தோலை; ஓங்கி அடித்தான்! ஊத்தைச் சத்தம் இட்டான்! கள்வருக்கு வந்தது பயம்! கதிகலங்கினர்!! எடுத்தனர் ஓட்டம்!!! ஒரே ஓட்டந்தான்; குதிக்கால் குண்டியிலடிக்க! முனியப்பருக்கு அவ்வளவு பயம்! சுத்த வீரன் பொருளை எல்லாம் கட்டிக்கொண்டு வந்தான் வீட்டிற்கு! சில நாட்களின்பின் ஒருகாணி வாங்கினான். அதற்குள் நல்ல வீட்டைக் கட்டினான். நடந்தது 'டாம்பீக' வாழ்க்கை.

காசிப்பிள்ளை இவற்றையெல்லாம் பார்த்தான். வந்தது அவனுக்குப் பொறுமை! "ஏதடா உனக்குக்காசு" என்றான். "தோல் விற்றுப் பணங்கொண்டு வந்தேன்" என்றான் சுத்த வீரன். "தோல் விற்றால் பணஞ் சம்பாதிக்கலாமோ" என்றான் காசிப்பிள்ளை. 'ஆமாம்! தாராளமாக" என்றான் சுத்த வீரன்.

வெட்டினான் தனது மாடுகளை எல்லாம் காசிப்பிள்ளை; உரித்தான் தோலை! கட்டிக் கொண்டு போனான் கடைக்கு; கடைக்காரன் விசரன் என்று அடித்துத் துரத்தி விட்டான்.

காசிப்பிள்ளை இரவு இரவாக வீடுவந்து சேர்ந்தான். கொழுத்தினான் சிறுவனின் வீட்டை; சிறுவன் சுத்த வீரன் வெடெரிந்த கரியை மூட்டை கட்டிக்கொண்டு போனான். ஓர் செட்டியாரிடம் போய், செட்டியாரே! இப்பவுண் மூட்டைகளை இதில் வைக்கிறேன்; போகும்போது எடுக்கிறேன். என்றான். பல தொல்லைகளில் சுடுபட்டிருந்த செட்டியாரும் சிந்திக்காமல் ஆமாம் என்றார்.

சில நாட்கள் சென்றபின் திரும்பி வந்தான் சுத்த வீரன். தன் கரி மூட்டைகளை அங்கே விட்டு செட்டியாரின் பொன் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டுவந்து வேறொரு வீடுகட்டி அதிற் சுகமாக வழ்ந்தான்.

இதைக் கேள்வியுற்ற காசிப்பிள்ளைக்கு மூண்டது நெருப்பு. அவனுடைய வீட்டுக்கும் மூண்டது நெருப்பு. அந்தப் பெட்டியை எடுங்கள் என்றான் காசிப்பிள்ளையின் மனைவி. சீச்சீ! போடீ பைத்தியகாரி. அதுவும் எரிந்தால்தான் கனக்கவரும் கரி என்றான். கரியை மூட்டை கட்டிக்கொண்டு கடைகடையாய்த் திரிந்தான். கரிக்கு ஆயிரக்கணக்கில் பொன் கொடுப்பார் உண்டோ?! ஆயிரக்கணக்கில் கொடுத்தார்கள் அடியும் உதையும். மாட்டைக் கொன்றதும், வீட்டை எரித்ததுந்தான் விளைவு.

சு. இராமச்சந்திரஐயர் (270)

சரவணபவாநந்த வித்தியாசாலை, கோப்பாய்


## தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனப் பரீக்ஷா புத்தக சபையாரால் 3-3-36 ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.


சித்தந் தெளிந்தோர் தெளிவில் தெளிவான, சுத்த சுகக்கடலுள் தோயுநாள் எந்நாளோ.



# நிலாக்காட்சி

புலன்களே மனிதனுக் கின்பம்பயப்பன. புலன்களுட் சிறந்தது காட்சி. மாட்சியை அளிக்கவல்லது காட்சி. உயர்ச்சியை அளிக்கவல்லது மாட்சி. ஆகவே மாட்சியையும் உயர்ச்சியையும் அளிக்கவல்லது நிலாக்காட்சி. அத்தகைய ஒப்பற்ற காட்சியை யான் கண்டு களித்தவாறு:-

ஒரு நாள் பூரணை நாளென்று கேள்வி. அன்று மாலையாய்விட்டது. பட்சிசாலங்களெல்லாம் தத்தம் இருப்பிடங்களைக் குதூகலத்துடன் அடைந்தன. அவற்றின் கானம் மேலே தொனித்துக்கொண்டிருந்தது. கீழே தம் இனத்தோடு தழுவித் தம் குழந்தைகளை மகிழ்விக்கும் ஆரவாரம். பசுக்கள் தமது கன்றை நினைத்துக் கத்துவதால் மடியிலிருந்து ஒழுகும் பால் அவைகள் நடந்து வருவதனால் உண்டான தூசிகளை அடக்குமாறு தமது உறைவிடத்தை அடைந்தன. ஆகாயத்தின் ஒருபக்கம் நிர்மலமாய் மிளிர்ந்தது. இன்னொருபக்கம் செந்நிறமாய் இருந்தது. அப்போது குணதிசையிற் றோன்றினான் சந்திரன். அவன் பக்கலில் விண்மீன்கள் ஒளித்தன. யான் அவனை இந்திரனோ என ஒருகால் அயிர்த்தேன். பின் ஒருகால் தேவலோகத்தில் ஒரு பெண் பூக்கொய்கின்றாளோ எனச் சந்தேகித்தேன்.

இவ்வளவு நேரமும் மேலேநோக்கி நின்ற யான் ஒருகால் கீழே பார்த்தேன். கன்றைக் காணவில்லை. தாயைக்காணாச் சேயைப் போன்று அங்கும் மிங்கும் தேடிப் பார்த்தேன். மறைவான ஒதுக்கிடத்தில் ஒழித்திருப்பதைக்கண்டேன். சந்திரன் தனது படையோடு யுத்தம் செய்து வெளிப்பட்டுள்ளான் என்று எண்ணினேன்.

அவனின் உருண்டைவடிவமும், வெண்ணிறமும், அவனின்றும் பரப்பிய நிலாவொளியும் என்மனதைக் கவர்ந்தது. பாலின் வெள்ளிது கொக்கு என்பதை மறக்கச் செய்துவிட்டான். சந்திரன், பகலவனும் இவன் அழகைப்பருகுவான் எண்ணி மறைந்திருந்தான்.

சந்திரனைக் கண்டதும் தாமரை மலர்கள் கூப்பின. குவளை மலர்கள் அலர்ந்தன. குளங்கள் நீரை வாரி அள்ளி எறிந்தன. நிலா சில இருள்களிடையே புள்ளி புள்ளியாக எறிந்தது.

அது பெண்களது பின்னலிற் சூட்டப்பட்ட பூக்களை நிகர்த்தது. குளத்திடையே புள்ளிகளாக எறிந்தது நிலா. மீன்கள் அப்புள்ளிகளைச் சிறுமீன்களென நினைத்துத் துள்ளிவிழுந்தன. புஷ்பங்கள் தேனைச் சொரிந்தன. வண்டுகள் கீதம் பாடிக்கொண்டு அவற்றை உண்டு மகிழ்ந்தன. விண்மீன்களை, செடியில்லாத புஷ்பங்கள் தொங்குகின்றதே என எண்ணி வண்டுகள் ஏமாந்தன. மண்ணில் எறித்தது நிலா. அது வெள்ளிபோல் மினுங்கியது. குழந்தைகள் அழுதலின்றிச் சந்திரனைப்பார்த்து மகிழ்ந்தார்கள்.

இதுகாறும் மாட்சி சில கூறினேம். இனி உயர்ச்சியுண்டேல் ஆராய்வாம்.

சந்திரன் வெண்மைநிறமுடையன். ஆனால் இடையே ஒரு மறு உண்டு. அவனை ஒரு பக்கம் பாம்புகள் பற்றிக்கொண்டன. அங்ஙனம் ஆபத்துக்குள் இருந்தும் நமக்கு ஒளியைத் தருகின்றான். அங்ஙனமே நற்குடியிற் பிறந்த பெரியோரும் தங்களிற்கு ஆபத்து வந்தவிடத்தும் பிறருக்கு நன்மை செய்வர். இதனைப் பெரியோர்,

"ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனே நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் தமகுடியிற் பிறந்தார்."

என்றனர்.

அத்தகைய மாட்சியும், உயர்ச்சியும் பொருந்திய நிலாத் தோற்றத்தைக் கண்டுகளித்து வீடு நண்ணினேன்.

நா. சடாட்சரகுமரன் (284)

சாதனபாடசாலை, சாவகச்சேரி

# தாயின் புத்திமதி

[காலையில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் தன் குழந்தையிடம் வயலுக்குப் போகும் தாய் புத்திமதி சொல்லுகிறள்]

காலையிலே சீக்கிரத்தில் எழுந்திருந்து
கை, காலைச் சுத்தமாய்க் கழுவிக்கொண்டு
நெற்றிக்கு நேராக இட்டுக்கொண்டு
நேற்றுத் துவைத்ததை எடுத்துடுத்திக்கொண்டு
சீராகப் புத்தகம் சிலேட்டுடனும்
நேராகப் பள்ளிக்கு விரைந்துவிடு.
பள்ளியிலே ஆசான் சொன்னபடி
பாங்காகக் கேட்டுத் தெரிந்துகொண்டு
பக்கத்தி லிருக்கும் பாலருக்கும்
பாடம் வராவிட்டால் எடுத்துச்சொல்லி
"பிழையின்றிப் படித்திடுங்கள், சோதரரே" என்று
பிரியமுடன் நடந்துகொள் எல்லோரிடமும்.
மாலையிலே கற்றபின் திரும்பும்போது
மாந்தோப்பில் நெடுநேரம் விளையாடாமல்
மாடுகன்றுக் கூட்டத்திற் போய்க்கலவாமல்
கூடவரும் உன்பள்ளித் தோழரிடம்
குருசொன்ன பழங்கதையைத் திருப்பிச்சொல்லி
"நல்லபடி நாம்நடந்தால், எல்லாம்நன்று"
என்றுபல நீதிகளைத் தெளிவாய்ப்பேசி
இருள்வந்து உலகத்தை இருட்டுமுன்னே
என்கண்ணே வந்துசே ரென்றுரைத்திட்டாள்.

—"ஹிந்துஸ்தான்"

சிற்றின்ப மூண்டூழ் சிதையஅனந் தங்கடல்போல், முற்றின்ப வெள்ளம்ளமை மூடுநாள் எந்நாளோ.

# பொறுமை கொள்ளேல்

சின்னப்பாவும், காசிப்பிள்ளையுஞ் சகோதரர்கள். சின்னப்பாவுக்கு ஒரேயொரு புத்திரன்! அவன் பெயர் சுத்தவீரன். காசிப்பிள்ளைக்கு அநேக புத்திரர்களுண்டு; சின்னப்பா வறியவர்; காசிப்பிள்ளை பணக்காரன்; கொஞ்சம் பொறுமையும் கூட.

கொஞ்சக் காலத்தால் சின்னப்பா இறந்து போனார். அவருடைய மனைவியும், பிள்ளையுங் காசிப்பிள்ளை வீட்டிற்கு வந்தார்கள். காசிப்பிள்ளை சுத்த வீரனைத் தன் பிள்ளைகளோடு படிக்க விடவில்லை; சில மாடுகளைக் கொடுத்து 'மேய்த்துவா' என்றனுப்பினான். சுத்தவீரனுக்கென்று புறம்பாகவும் ஒரு மாடு கொடுத்தான். சிறுவன் தனது மாட்டை மேய்த்தான்; காசிப்பிள்ளையின் மாடுகளைக் கட்டி வைத்தான். இதனையறிந்த காசிப்பிள்ளை அவனுடைய மாட்டை வெட்டிவிட்டான்.

சிறுவன், "குஞ்சியப்பு; மாடு போனாலுந் தோல் பத்திரம்" என்றான்! காசிப்பிள்ளை கோபத்துடன் வீடு போய்ச் சேர்ந்தான்.

சுத்தவீரன் அம் மாட்டின் தோலை உரித்துக் கொண்டு வீட்டுக்குப் போனான். தன் தாயிடம் தோல் விற்று வருவதாகச் சொல்லிவிட்டுக் காட்டு மார்க்கமாகச் சென்றான். பொழுது அஸ்தமித்தது; ஒரே அந்தகாரம்! காட்டுக்குள் ஒரு முனியப்பர் கோவில் இருந்தது. களவெடுப்பவர்கள் வழிபடுந் தெய்வமும் அவர்! அக் கோவிலின் மூலையிற் சிறுவன் படுத்துக்கொண்டான்.

அன்று, களவெடுப்பதற்கு வந்த கள்வர் சன்னிதானத்தின் முன்னின்று, "நாங்கள் எடுக்கும் பொருளில் அரைவாசி உமக்கு" என்று நேர்ந்துவிட்டுக் களவெடுக்கப் போயினர். சுத்தவீரன் இவற்றைக் கேட்டுக்கொண்டு படுத்திருந்தான். கள்வர் களவெடுத்துக்கொண்டு வந்து பாதியைப் பங்கிட்டு வைத்துவிட்டுப் போக ஆரம்பித்தனர். இவற்றையெல்லாம் பார்த்தான் சுத்தவீரன்! அவனுக்கு வந்தது ஆவேசம்!! எடுத்தான் தோலை; ஓங்கி அடித்தான்! உரத்துச் சத்தம் இட்டான்! கள்வருக்கு வந்தது பயம்! கதிகலங்கினர்!! எடுத்தனர் ஓட்டம்!!! ஒரே ஓட்டந்தான்; குதிக்கால் குண்டியிலடிக்க! முனியப்பருக்கு அவ்வளவு பயம்! சுத்தவீரன் பொருளை எல்லாம் கட்டிக்கொண்டு வந்தான் வீட்டிற்கு! சில நாட்களின்பின், ஒருகாணி வாங்கினான். அதற்குள் நல்ல வீட்டைக் கட்டினான். நடந்தது 'டாம்பீக' வாழ்க்கை.

காசிப்பிள்ளை இவற்றையெல்லாம் பார்த்தான். வந்தது அவனுக்குப் பொறுமை! "ஏதடா உனக்குக்காசு" என்றான். "தோல் விற்றுப் பணங்கொண்டு வந்தேன்" என்றான் சுத்தவீரன். "தோல் விற்றால்" பணஞ் சம்பாதிக்கலாமோ" என்றான் காசிப்பிள்ளை. 'ஆமாம்! தாராளமாக" என்றான் சுத்தவீரன்.

வெட்டினான் தனது மாடுகளை எல்லாம் காசிப்பிள்ளை; உரித்தான் தோலை! கட்டிக் கொண்டு போனான் கடைக்கு; கடைக்காரன் விசரன் என்று அடித்துத் துரத்தி விட்டான்.

காசிப்பிள்ளை இரவு இரவாக வீடுவந்து சேர்ந்தான். கொழுத்தினான் சிறுவனின் வீட்டை; சிறுவன் சுத்தவீரன் வீடெரிந்த கரியை மூட்டை கட்டிக்கொண்டு போனான். ஓர் செட்டியாரிடம் போய், செட்டியாரே! இப்பவுண் மூட்டைகளை இதில் வைக்கிறேன்; போகும்போது எடுக்கிறேன். என்றான். பல தொல்லைகளில் அடிபட்டிருந்த செட்டியாரும் நிதானிக்காமல் ஆமாம் என்றார்.

சில நாட்கள் சென்றபின் திரும்பி வந்தான் சுத்தவீரன். தன் கரி மூட்டைகளை அங்கே விட்டு செட்டியாரின் பொன் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டுவந்து வேறொரு வீடுகட்டி அதிற் சுகமாக வாழ்ந்தான்.

இதைக் கேள்வியுற்ற காசிப்பிள்ளைக்கு மூண்டது நெருப்பு. அவனுடைய வீட்டுக்கும் மூண்டது நெருப்பு. அந்தப் பெட்டியை எடுங்கள் என்றாள் காசிப்பிள்ளையின் மனைவி. சீச்சீ! போடீ பைத்தியகாரி. அதுவும் எரிந்தால்தான் கனக்கவரும் கரி என்றான். கரியை மூட்டை கட்டிக்கொண்டு கடைகடையாய்த் திரிந்தான். கரிக்கு ஆயிரக்கணக்கில் பொன் கொடுப்பார் உண்டோ?! ஆயிரக்கணக்கில் கொடுத்தார்கள் அடியும் உதையும். மாட்டைக் கொன்றதும், வீட்டை எரித்ததுந்தான் விளைவு.

சு. இராமச்சந்திரஐயர் (270)
சரவணபவாநந்த வித்தியாசாலை, கோப்பாய்


## தமிழ் மஞ்சரி
(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனப் பரீக்ஷா புத்தக சபையாரால் 3-3-36 ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.






# நிலாக்காட்சி

புலன்களே மனிதனுக் கின்பம்பயப்பன. புலன்களுட் சிறந்தது காட்சி. மாட்சியை அளிக்கவல்லது காட்சி. உயர்ச்சியை அளிக்கவல்லது மாட்சி. ஆகவே மாட்சியையும் உயர்ச்சியையும் அளிக்கவல்லது நிலாக்காட்சி. அத்தகைய ஒப்பற்ற காட்சியை யான் கண்டு களித்தவாறு:-

ஒரு நாள் பூரணை நாளென்று கேள்வி. அன்று மாலையாய்விட்டது. பட்சிசாலங்களெல்லாம் தத்தம் இருப்பிடங்களைக் குதூகலத்துடன் அடைந்தன. அவற்றின் கானம் மேலே தொனித்துக்கொண்டிருந்தது. கீழே தம் இனத்தோடு தழுவித் தம் குழந்தைகளை மகிழ்விக்கும் ஆரவாரம். பசுக்கள் தமது கன்றை நினைத்துக் கத்துவதால் மடியிலிருந்து ஒழுகும் பால் அவைகள் நடந்து வருவதனால் உண்டான தூசிகளை அடக்குமாறு தமது உறைவிடத்தை அடைந்தன. ஆகாயத்தின் ஒருபக்கம் நிர்மலமாய் மிளிர்ந்தது. இன்னொருபக்கம் செந்நிறமாய் இருந்தது. அப்போது குணதிசையிற் றோன்றினான் சந்திரன். அவன் பக்கலில் விண்மீன்கள் ஒளித்தன. யான் அவனை இந்திரனோ என ஒருகால் அயிர்த்தேன். பின் ஒருகால் தேவலோகத்தில் ஒரு பெண் பூக்கொய்கின்றாளோ எனச் சந்தேகித்தேன்.

இவ்வளவு நேரமும் மேலேநோக்கி நின்ற யான் ஒருகால் கீழே பார்த்தேன். கந்தூலைக் காணவில்லை. தாயைக்காணுச் சேயைப் போன்று அங்கும் மிங்கும் தேடிப் பார்த்தேன். மறைவான ஒதுக்கிடத்தில் ஒழித்திருப்பதைக்கண்டேன். சந்திரன் தனது படையோடு யுத்தம் செய்து வெளிப்பட்டுள்ளான் என்று எண்ணினேன்.

அவனின் உருண்டைவடிவமும், வெண்ணிறமும், அவனின்றும் பரப்பிய நிலாவொளியும் என்மனதைக் கவர்ந்தது. பாலின் வெள்ளிது கொக்கு என்பதை மறக்கச் செய்துவிட்டான். சந்திரன், பகலவனும் இவன் அழகைப்பருகுவான் எண்ணி மறைந்திருந்தான்.

சந்திரனைக் கண்டதும் தாமரை மலர்கள் கூம்பின. குவளை மலர்கள் அலர்ந்தன. குளங்கள் நீரை வாரி அள்ளி எறிந்தன. நிலா சில இருள்களிடையே புள்ளி புள்ளியாக எறிந்தது.

அது பெண்களது பின்னலிற் சூட்டப்பட்ட பூக்களை நிகர்த்தது. குளத்திடையே புள்ளிகளாக எறிந்தது நிலா. மீன்கள் அப்புள்ளிகளைச் சிறு மீன்களென நினைத்துத் துள்ளிவிழுந்தன. புஷ்பங்கள் தேனைச் சொரிந்தன. வண்டுகள் கீதம் பாடிக்கொண்டு அவற்றை உண்டு மகிழ்ந்தன. விண்மீன்களை, செடியில்லாத புஷ்பங்கள் தொங்குகின்றதே என எண்ணி வண்டுகள் ஏமாந்தன. மண்ணில் எறித்தது நிலா. அது வெள்ளிபோல் மினுங்கியது. குழந்தைகள் அழுதலின்றிச் சந்திரனைப்பார்த்து மகிழ்ந்தார்கள்.

# தாயின் புத்திமதி

[காலையில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் தன் குழந்தையிடம் வயலுக்குப் போகும் தாய் புத்திமதி சொல்லுகிறள்]

காலையிலே சீக்கிரத்தில் எழுந்திருந்து
கை, காலைச் சுத்தமாய்க் கழுவிக்கொண்டு
நெற்றிக்கு நேராக இட்டுக்கொண்டு
நேற்றுத் துவைத்ததை எடுத்துடுத்திக்கொண்டு
சிராகப் புத்தகம் சிலேட்டுடனும்
நேராகப் பள்ளிக்கு விரைந்துவிடு.
பள்ளியிலே ஆசான் சொன்னபடி
பாங்காகக் கேட்டுத் தெரிந்துகொண்டு
பக்கத்தி லிருக்கும் பாலருக்கும்
பாடம் வராவிட்டால் எடுத்துச்சொல்லி
"பிழையின்றிப் படித்திடுங்கள், சோதரரே" என்று
பிரியமுடன் நடந்துகொள் ளெல்லோரிடமும்.
மாலையிலே கற்றுப்பின் திரும்பும்போது
மாந்தோப்பில் நெடுநேரம் விளையாடாமல்
மாடுகன்றுக் கூட்டத்திற் போய்க்கலவாமல்
கூடவரும் உன்பள்ளித் தோழரிடம்
குருசொன்ன பழங்கதையைத் திருப்பிச்சொல்லி
"நல்லபடி நாம்நடந்தால், எல்லாம்நன்று"
என்றுபல நீதிகளைத் தெளிவாய்ப்பேசி
இருள்வந்து உலகத்தை இருட்டுமுன்னே
என்கண்ணே வந்துசே ரென்றுரைத்திட்டாள்.

—"ஹிந்துஸ்தான்"

இதுகாறும் மாட்சி சில கூறினேம். இனி உயர்ச்சியுண்டேல் ஆராய்வாம்.

சந்திரன் வெண்மைநிறமுடையன். ஆனல் இடையே ஒரு மறு உண்டு. அவனை ஒரு பக்கம் பாம்புகள் பற்றிக்கொண்டன. அங்ஙனம் ஆபத்துக்குள் இருந்தும் நமக்கு ஒளியைத் தருகின்றான். அங்ஙனமே நற்குடியிற் பிறந்த பெரியோரும் தங்களிற்கு ஆபத்து வந்தவிடத்தும் பிறருக்கு நன்மை செய்வர். இதனைப் பெரியோர்,

"ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனே நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் தமகுடியிற் பிறந்தார்."

என்றனர்.

அத்தகைய மாட்சியும், உயர்ச்சியும் பொருந்திய நிலாத் தோற்றத்தைக் கண்டுகளித்து வீடு நண்ணினேன்.

ந. சடாட்சரகுமரன் (284)
சாதனபாடசாலை, சாவகச்சேரி

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பார்ந்த குழந்தைகாள் !

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பொழுது போக்கு உண்டு. நான் மூக்குக்கண்ணாடியை மாட்டிக் கொண்டு பேப்பர் படிப்பதில் பொழுது போக்குவேன். பாட்டியிருக்கிறளே! அவள் ஒருகாலை நீட்டி யுட்கார்ந்து கொண்டு அடுத்தவீட்டு எதிர்வீட்டுப் பாட்டிமாரோடு சங்கக்கூடி ஊர் வம்பு கோறிப்பதில் பொழுதுபோக்குக் காணுவாள். சின்னப்பேத்தி தங்கமணி மண் சோறுகறி காய்ச்சி விளையாடுவாள். அவள் அம்மா ராஜி நவநாகரீகமாக வலைமாதிரிப் புடவைகளில் பட்டுநூலால் கோழியும் மயிலும் இங்கிலீஸ் எழுத்துக்களும் பூக்களும் வரைந்து பொழுது போக்குவாள். குறும்புப் பேரன் மணியிருக்கிறனே! பொல்லாத பயல் அவனுடைய பொழுதுபோக்கே ஒரு தனி. மைக்கூட்டை எடுத்து சோற்றுப்பானைக்குள் கொட்டிவிடுவது; அக்காவின் பின்னலில் நாலை முடிந்து கப்புக்காலில் மாட்டிவிடுவது; வெள்ளைச் சுவரில் கரிச்சித்திரம் வரைவது இவைகள்தான் அவனுடைய பொழுதுபோக்கு!

இப்மாதிரி ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதமான பொழுதுபோக்கு வைத்திருக்கிறீர்களல்லவா? சில பிள்ளைகள் சங்கீதத்தில் பொழுது போக்குவார்கள். சில பிள்ளைகள் சித்திரம் போடுவார்கள். ஆனால் புஸ்தகங்களைப் படிக்கும் பொழுதுபோக்கு மாத்திரம் உங்களில் யாரிடமாவதுண்டா? — சொன்னாலும் நான் நம்பவே மாட்டேன்!

மேல்நாட்டு நாகரிகம் பரவிவிட்ட எங்கள் நாட்டில் இப்போது பல புதிய பொழுது போக்குகள் நுழைந்திருக்கின்றன. புகைப்படம் பிடித்தல் ஒரு சாதி. இது ஒரு சந்தோஷமான பொழுது போக்காயிருந்தாலும் பணக் கஷ்டமுள்ள பெற்றோரின் குழந்தைகளை இதைக் கைக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கிறேன். இது மிகவும் செலவாகும் ஒரு பொழுபோக்கு. நான் சிறுவனாயிருக்கையில் புகைப்படம் பிடிப்பதில் ஒரு பிரேமை. விலையுயர்ந்த ஒரு 'கமெரா' வாங்கிக்கொண்டு கண்ட தெல்லாவற்றையும் படம் பிடித்தேன். இதில் பெரிய செலவு. ஆனால் பலன் எல்லாம் அனேகமாகக் குட்டிச் சுவர்தான்! இப்படி ஒரு மூன்று வருடமாக எத்தனையோ நூறு ரூபாய்களைப் போக்கிவிட்டேன். கடைசியாக என் பெற்றோர் அந்தக் 'கமெரா'வையே தொலைத்துவிட்டனர்! ஆனால் நான் விடவில்லை. இப்போது அந்தப் பைத்தியமில்லாவிட்டாலும் படம் பிடிக்க மாத்திரம் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

இன்னுமொரு பொழுதுபோக்கு பழைய முத்திரைகளைச் சேகரித்தல். இதுவும் மேனாட்டிலிருந்து வந்தது. இப்போது எங்கள் நாட்டில் எத்தனையோ குழந்தைகள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். பழைய தபால் முத்திரைகளைப் பழுதுபடாமல் கழுவி எடுத்து ஊர்வாரியாகச் சேகரித்தால் அதில் ஒரு பொழுதுபோக்கும் இன்பமும் உண்டு. தேசங்களின் மாறுதல்களை அறியலாம். அமெரிக்கா முதலிய தேசங்களில் பெரிய கோடீஸ்வரர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் தம்மிடமில்லாத பழைய முத்திரையொன்றுக்கு எத்தனை லக்ஷம் பவுணும் கொடுத்து வாங்குவார்களாம். சில காலத்துக்கு முன்பு இலங்கையின் பழைய 2 சத முத்திரை ஒன்று கிடைக்காமல் போய்விட்டது. ஒருவர்மாத்திரம் ஒரு முத்திரை வைத்திருந்தார். அந்த முத்திரையை ஒரு பிரபு ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கினராம்! இம்மாதிரி வந்து இப்போது பழைய முத்திரைகள் ஒரு வியாபாரத்துக்குமிடமாயிற்று. கொழும்பில் பல கடைகளில் இது நடக்துகிறார்கள். அதனால் எத்தனையோ பேர் மிகுந்த சிரத்தையுடன் பழைய முத்திரைகளைக் கவரிலிருந்து கழுவி எடுத்து வைத்திருக்கிறார்கள்.

முத்திரைகளை ஒருசிலர் சேகரிக்க வேறுசிலர் பற்பல பழைய சாமான்களைச் சேகரிக்கின்றனர். சில குழந்தைகள் கடற்கரை ஊரிகளையும், நெருப்புப் பெட்டியின் பலவிதமான லேபல்களையும், சொக்கலேற் படங்களையும், சினிமாப் படங்களையும், பிரபல மனிதரின் படங்களையும் சேகரிக்கிறார்கள்.

சரி, உங்களுடைய பொழுதுபோக்கென்ன? எங்கே உங்கள் கடிதங்களில் உண்மையாக நீங்கள் கைக்கொண்டிருக்கும் பொழுதுபோக்கைத் தெரிவியுங்கள் பார்க்கலாம்!

—தாத்தா.

[பழைய முத்திரைகள் சேகரிப்போர் எங்கள் சங்கத்திலும் பலர் இருக்கிறார்களெனத் தெரிகிறது. இவர்கள் இலங்கையின் பழைய முத்திரைகள், இப்போது நடைமுறையிலிருக்கும் முத்திரைகள் எல்லாவற்றிலும் இனத்துக்கொன்று திப்புரவாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். மிச்சமாக இருப்பவற்றை வெளியூர் நண்பர்களுக்குக் கொடுத்து தங்களிடமில்லாதவற்றை அவர்களிடமிருந்து பெறவேண்டும். இதற்கு நண்பர்கள் வேண்டுமல்லவா? இந்தியா முதலிய வெளிநாட்டு நண்பர் வேண்டுவோர் தெரிவிக்கலாம். நான் சில குழந்தைகளின் விலாசம் தருகிறேன். ஆனால் கடிதமெழுதுவது ஆங்கிலத்தில் தான் முடியும். தாத்தாவிடம் கூடப் பல பிறதேச முத்திரைகளிருக்கின்றன. வேண்டுவோர் மூக்கிக்கொள்ளலாம்.]

விலாசம்: Robert S. Merrick,
49, Preston Road
Birmingham 26
**England**

இவர் இங்கிலாந்திலுள்ள ஒரு இளைஞர். அந்த ஊர் பழைய முத்திரைகளும் வேறூர் முத்திரைகளும் விரும்புவோர் இவருக்கு எழுதலாம். தபாற்செலவு சதம் 20.

புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

| | | | |
|---|---|---|---|
| 284 | நா. சடாட்சாகுமாரன் | 286 | அ. தில்லையம்பலம் |
| 285 | சி. மனோரஞ்சிதம் | 287 | நா. மகேஸ்வரி |

யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு "திருமகள்நிலைய" த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டிய' இருள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம்ஞு ஆகஸ்ட்மீ 6உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றூங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதிஞு ஆடிமீ உஅஉ (13-8-39) { இல. 41

## இலங்கையின் கல்வி நிலை

வித்தியாகர்த்தரின் 1938-ம் ஆண்டின் கல்வி அறிக்கை வெளிவந்துள்ளது. இவ்வறிக்கையிலிருந்து இலங்கையின் கல்விநிலை திருத்தமடைந்திருக்கிறதென்று கூறுவதற்கிடமில்லை. கல்விமுறையில் ஒருவித மாற்றமும் காணப்படவில்லை. அரசினர் உத்தியோகத்துக்கேற்ற கல்வியே இப்போதும் கற்பிக்கப்பட்டுவருகிறது. ஆனால் கற்றயாவருக்கும் அரசினர் உத்தியோகம் கொடுக்க முடியவில்லை. நடைமுறையிலிருக்கும் கல்வியைத் தவிர்த்துக் கைத்தொழில் சம்பந்தமான கல்வி விருத்தியைப்பற்றியும் ஒன்றுங் குறிக்கப்படவில்லை. உலகத்தில் இலங்கையைப் போலப் பிற்போக்கான கல்விமுறையை அனுசரிக்கும் நாடுகள் கிடையாதெனலாம்.

ஆசிரிய தராதரப் பரீக்ஷை நிற்பாட்டப்பட்டதன் காரணமாக பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் தொகை குறைந்து வருகிறது. உபாத்தியாயர்களாக வரும் நோக்கத்தோடு படிக்கும் மாணவர்கள் எல்லோரும் ஆசிரிய தராதரப் பரீக்ஷை நிற்பாட்டப்பட்டதோடு மனந் தளர்ந்துவிட்டனர். வித்தியாபகுதியார் கைத்தொழில் சம்பந்தமான கல்வியைக் கற்பிக்க முன்வந்துள்ளனரா? மாணவர்களின் நிலை பரிதாபப்படத்தக்கதே.

ஆங்கில பள்ளிக் கூடங்களின் கல்விமுறைதானும் விரும்பப்படத்தக்கதா? இருபத்தைந்து முப்பது வருஷத்துக்கு முன்னிருந்த லண்டன் மற்றிக்குலேசன் பரீக்ஷைதான் இப்போதும் இருந்துவருகிறது. ஆங்கில நாட்டு மாணவர்க்கு ஏற்படுத்தப்பட்ட இப்பரீக்ஷையில் சித்தியடையச் செய்வதே ஆங்கில பள்ளிக்கூடங்களின் நோக்கம். இப்பரீக்ஷையைத் தவிர்த்து இலங்கைப் பரீக்ஷையொன்று வைத்தல் இலங்கைக்குப் பெரிதும் நன்மையைத் தரும். வித்தியாகர்த்தர் இவ்விஷயத்தில் மௌனஞ் சாதிக்கிறார். இலங்கையிலுள்ள கல்விநிபுணர்கள் இத்தகைய திருத்தத்தை கொண்டுவரமுயலவேண்டும்.

உபாத்தியாயர்கள் நிலை பரிதாபத்துக்கிடமானதாகக் காணப்படுகிறது. வகுப்புமுறை வரும்போது பல உபாத்தியாயர்கள் வேலையில்லாமல் இருக்கவேண்டி நேரிடும். சிக்கனசபையார் தமது அறிக்கையில் "பள்ளிக்கூடச் செலவுக்கு" என்ற சாட்டைச் சொல்லி முகாமைக்காரரிற் பெரும் பாலார் உபாத்தியாயர்கள் சம்பளத்திலிருந்து 10 வீதம் தொடக்கம் 20 அல்லது 25 வீதம் வரையும் பெறுகின்றனர். உத்தியோகம் கொடுக்கும்போது அவர்கள் 100 ரூபா தொடக்கம் 250 ரூபா வரைக்கும் கைக்கூலியும் வாங்குகின்றனர். கொடுக்க மறுத்தாலும் சங்கடம் கொடுத்தால் வித்தியாபகுதியார் அறியாமற் களவாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்வித நிலைக்கு வித்தியா பகுதியாரே காரணமாவர். மேலதிகமான உபாத்தியாயர்களைப் பயிற்சிபெறச் செய்து வேலையில்லாம

(தொடர்ச்சி 325-ம் பக்கம் பார்க்க)